**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க. எண்.4799/ஆ5/2025, நாள். 25.09.2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – வனஉயிரின வார விழா – மாணவ / மாணவியர்களுக்கு 07.10.2025 அன்று மாவட்ட அளவில் ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் வினாடி வினா போட்டிகள் நடைபெறுதல் – மாணவர்கள் கலந்துக்கொள்ள அறிவுறுத்தல் – சார்பாக

பார்வை வேலூர் வனக்கோட்டம், மாவட்ட வன அலுவலரின் கடித ந.க.எண்.7958/2025/எம், நாள். 16.09.2025

•••••

பார்வையில் காணும் கடிதத்தில், வனத்துறையின் சார்பாக ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் முதல் வாரம் வன உயிரின வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது எனவும், இந்த ஆண்டும் வனஉயிரின வாரவிழாவினை கொண்டாடும் பொருட்டு மாவட்ட அளவில் மாணவ / மாணவிகளுக்கு ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் வினாடி வினா போட்டி 07.10.2025 (செவ்வாய்கிழமை) அன்று காலை 9.30 மணிக்கு வேலூர் ஊரிஸ் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ளது எனவும் இப்போட்டிகளில் மாணவ/மாணவிகள் கலந்துக்கொள்ள கோரப்பட்டுள்ளது மேலும் 08.10.2025 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு விழா நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் வினாடி வினா போட்டி போட்டிக்கான விவரங்கள், பிரிவுகள், மற்றும் தலைப்புகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவிலும் அதிகபட்சம் மூன்று மாணவ/மாணவியர் மிகாமல் கலந்துக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும்படி நடைபெறும் போட்டிகளில் மாணவ / மாணவியர்களை பொறுப்பாசிரியர் ஒருவருடன் பாதுகாப்பாக கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை தொடக்க / நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் அனைத்து வகை தனியார் பள்ளி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – போட்டியின் விவரங்கள் மற்றும் தலைப்புகள்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்
   (தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை தொடக்க / நடுநிலை/ உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகள்
   மற்றும் தனியார் பள்ளிகள்,
   வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்ட வன அலுவலர்
   வேலூர் வனக்கோட்டம், வேலூர் – 9.
2. தலைமையாசிரியர்,
   ஊரிஸ் மேல்நிலைப் பள்ளி, வேலூர்.